**1)** 'நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு' என்று துவங்கும் பாடல் இடம்பெறும் நூல்?

A) பழமொழி நானூறு B) மூதுரை C) ஆசாரக்கோவை D) நல்வழி

**2)** "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற பாரதிதாசன் பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக:

(i) கவிதைக்கு - 1. வேல்

(ii) அசதிக்கு - 2. தேன்

(iii) புகழுக்கு - 3. வாள்

(iv) வாழ்வுக்கு - 4. நீர்

(v) வளர்ச்சி - 5. ஊர்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 1 | 5 | 4 |
| B) | 2 | 3 | 4 | 5 | 1 |
| C) | 2 | 1 | 3 | 5 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 | 5 |

**3)** பொருந்தா இணை எது?

A) ஆத்திச்சூடி - ஔவையார் B) புதிய ஆத்திச்சூடி - பாரதியார்

C) அறிவியல் ஆத்திச்சூடி - புலவர் செ.இராசு D) உலகநீதி - உலகநாதர்

**4)** பொருந்தா இணை எது?

A) சிரம் - தலை B) இலை - தளை C) கடல் - பரவை D) பூ - மனம்

**5)** "மன்னற்குத் தன்தேசம் அல்லால் சிறப்பில்லை - கசுற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" - என்னும் பாடல் இடம் பெற்ற நூல்?

A) கொன்றை வேந்தன் B) மூதுரை C) ஆத்திசூடி D) நல்வழி

**6)** ஆசாரக்கோவை கூறும் எட்டு நல்லொழுக்கங்களில் சேராதது எது?

A) மூத்தோர் அறிவுரையை கேட்டு நடத்தல் B) எல்லோரையும் சமமாகப் பேணுதல்

C) இனிய சொற்களைப் பேசுதல் D) கல்வி அறிவு பெறுதல்

**7)** பொருந்தா இணை எது?

A) மூதுரை - 31 வெண்பாக்கள் B) அறநெறிச்சாரம் - 226 வெண்பாக்கள்

C) ஆசாரக்கோவை - 100 வெண்பாக்கள் D) மேற்கண்ட எதுவுமில்லை

**8)** "ஊழி" என்ற சொல்லின் பொருள் என்ன?

A) பிறவிப்பயன் B) முன்வினை

C) மேலான பொருள் D) நீண்டதொரு காலப்பகுதி

**9)** தமிழின் புகழ் எட்டுத்திக்கிலும் பரவிடும் வகையில் கைகளைக் கொட்டிக் கும்மியடிப்போம் என்று பாடுபவர் யார்?

A) பாரதியார் B) பெருஞ்சித்திரனார்

C) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் D) பாரதிதாசனார்

ETW ACADEMY

**10)** பொருந்தாத இணை எது?

A) பாரதியார் - தேசிய கவி
B) பெருஞ்சித்திரனார் - பாவலரேறு
C) கல்யாணசுந்தரனார் - பகுத்தறிவுக் கவிராயர்
D) பாரதிதாசனார் - புரட்சிக் கவி

**11)** தமிழ் எழுத்துகளில் எந்த எழுத்துக்கு மட்டும் இன எழுத்து இல்லை?

A) உயிரெழுத்து
B) ஆயுத எழுத்து
C) மெய் எழுத்து
D) இவற்றில் எதுவுமில்லை

**12)** இயற்கையைப் போற்றி துவங்கும் சிலப்பதிகாரத்தில் முதலில் போற்றப்படுவது?

A) நிலா B) சூரியன் C) மழை D) வானம்

**13)** சிலப்பதிகாரம் எவ்வாறு போற்றப்படுவதில்லை?

A) முத்தமிழ்க் காப்பியம்
B) பௌத்த காப்பியம்
C) குடிமக்கள் காப்பியம்
D) நாடகக் காப்பியம்

**14)** "தம்மை ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர்" என்று அப்துல்கலாமால் பாராட்டப்பட்டவர்?

A) வளர்மதி
B) மயில்சாமி அண்ணாதுரை
C) சிவன்
D) முத்து

**15)** பொருத்துக:

(i) ஔடதம் - 1. மகரந்தம்
(ii) மேதினி - 2. ஆணைச்சக்கரம்
(iii) கோட்டு - 3. மருந்து
(iv) கொங்கு - 4. உலகம்
(v) திகிரி - 5. சிகரம்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 3 | 4 | 5 | 1 | 2 |
| C) | 3 | 4 | 5 | 2 | 1 |
| D) | 2 | 3 | 4 | 1 | 5 |

**16)** ஔவையார் நூல்களில் சேராதது?

A) நரிவிருத்தம் B) நல்வழி C) கொன்றை வேந்தன் D) மூதுரை

**17)** ஆசாரக்கோவை பற்றிய செய்திகளில் தவறானது எது?

A) ஆசாரக்கோவை என்பதன்.பொருள்: நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு
B) பதினெண்மேற்கணக்கு நூல்களுள் ஒன்று
C) இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார்
D) தவறானது ஏதுமில்லை

**18)** பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்வது --------- ஆகும்.

A) பொச்சாப்பு
B) அழுக்காறு
C) பொறை
D) வெகுளி

ETW ACADEMY

**19)** பெருஞ்சித்திரனார் பற்றிய தவறான செய்தி எது?

A) இவரின் இயற்பெயர் துரை.மாணிக்கம் என்பதாகும்

B) இவர் எழுதிய கனிச்சாறு என்ற நூல் எட்டு தொகுதிகளாக வெளிவந்தது

C) தனித்தமிழ் இயக்கத்தில் பங்காற்றியவர் இவர்

D) தமிழ்உலகம் இவர் வெளிட்ட இதழ்

**20)** பாரதி பராசக்தியிடம் வேண்டியதை பொருத்துக.

(i) முத்துச்சுடர்போல - 1. மாடங்கள்

(ii) தூய நிறத்தில் - 2. தென்றல்

(iii) சித்தம் மகிழ்ந்திட - 3. நிலாஒளி

| | (i) | (ii) | (iii) |
|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 |
| B) | 2 | 3 | 1 |
| C) | 2 | 1 | 3 |
| D) | 1 | 2 | 3 |

**21)** பறவைகள் வலசை போதலைப் பற்றிய தவறான தொடரைக் கண்டறிக.

A) பறவைகள் பொதுவாக தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கியும் பயணிக்கின்றன.

B) பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்தப்பாதையிலேயே பறக்கின்றன.

C) சில பறவை இனங்கள் போவதற்கும் வருவதற்கும் இருவேறு பாதைகளைப் பயன்படுத்துகின்றன.

D) பறவைகள் உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம் ஆகிய காரணங்களுக்காக இடம்பெயர்கின்றன.

**22)** எந்த நூலைப் படித்தபோது அறிவு, தன்னம்பிக்கை, மகிழ்ச்சி ஆகிய மூன்றையும் பெற்றதாக கலாம் கூறுகிறார்?

A) அண்டு தி லாஸ்ட் B) விளக்குகள் பல தந்த ஒளி

C) போரும் அமைதியும் D) திருக்குறள்

**23)** அப்துல்கலாம் தலைமையில், பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் கார்பன் இழைகளைக் கொண்டு எவ்வளவு எடையுள்ள செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன?

A) 250 கிராம் B) 350 கிராம் C) 500 கிராம் D) 300 கிராம்

**24)** யாருடன் சேரக்கூடாது என்று பட்டுக்கோட்டையார் பாடுகிறார்?

A) தாயையும் தாய்நாட்டையும் மதிக்காதவருடன் B) பெரியோர் சொல் கேளாதவருடன்

C) பிறர் உழைப்பை நம்பி வாழ்பவரிடம் D) தன்மானம் இல்லாத கோழைகளுடன்

**25)** பொருந்தா இணை எது?

A) சேரநாடு - முத்தேன் B) சோழநாடு - அறுசுவை உணவு

C) பாண்டியநாடு - குளங்கள் & அணைகள் D) மேற்கண்ட எதுவுமில்லை

ETW ACADEMY

**26)** போகித்திருநாள் குறித்த ஆன்றோர் மொழியான "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பது?

A) மூதுரைச் சொல் B) தொல்காப்பியர் வாக்கு

C) நன்னூல் நூற்பா D) சைவ சமய வழக்கு

**27)** பின்வரும் வாக்கியங்களை ஆராய்ந்து விடையளி

1. திருவள்ளுவர் ஆண்டு தை இரண்டாம் நாள் துவங்குகிறது

2. திருவள்ளுவர் தினமானது தை முதல் நாள் கொண்டாடப்படுகிறது.

A) 2 கூற்றுகளும் சரி B) 2 கூற்றுகளும் தவறு

C) 1 சரி, 2 தவறு D) 1 தவறு, 2 சரி

**28)** அறுவடைத் திருநாளானது லோரி என்ற பெயரில் எங்கு கொண்டாடப்படுகிறது?

A) குஜராத் B) ராஜஸ்தான் C) A & B D) பஞ்சாப்

**29)** "இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இதுநீ கருதினை ஆயின்" என்ற பாடல் இடம் பெற்றுள்ள நூல்?

A) அப்பர் தேவாரம் B) சிலப்பதிகாரம் C) தொல்காப்பியம் D) மணிமேகலை

**30)** சிட்டுக்குருவியின் வீழ்ச்சி என்பது, சலீம் அலி அவர்கள் எழுதிய

A) பறவைகள் ஆய்வு நூல் B) தன் வரலாற்று நூல்

C) சிட்டுக்குருவியின் வரலாறு பற்றிய நூல் D) சிட்டுக்குருவியின் அழிவு பற்றிய நூல்

**31)** "வானை அளப்போம் கடல் மீனையளப்போம் - சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம் - சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்" என்று பாடியவர்?

A) பாரதிதாசன் B) கவிமணி C) பாரதியார் D) தமிழ் ஒளி

**32)** 'புதுமைகளின் வெற்றியாளர்' என்னும் பட்டத்தை _______ என்ற ரோபோவிற்கு ஐ.நா சபை வழங்கியது.

A) டீப் ப்ளு B) டெஸ்லா C) சோபியா D) அலெக்சா

**33)** எத்தனை மைல் தூரத்திற்கு ஒரு நடுநிலைப்பள்ளி என்பது காமராசரின் திட்டமாகும்?

A) நான்கு மைல்கள் B) ஐந்து மைல்கள்

C) ஆறு மைல்கள் D) மூன்று மைல்கள்

**34)** மாமல்லபுர சிற்பங்களுக்கான பாறைக் கற்கள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டன?

A) காஞ்சிபுரம் B) மாமல்லபுரம்

C) உத்திரமேரூர் D) சித்தன்னவாசல்

**35)** அஃறிணை என்பதன் பொருள் என்ன?

A) தாழ்திணை B) கீழ்த்திணை C) உயர்வு அல்லாத திணை D) அனைத்தும்

**36)** துளிப்பா என்பது தமிழின்

A) கட்டுரை வடிவங்களில் ஒன்று B) சிறுகதை வடிவங்களில் ஒன்று

C) கவிதை வடிவங்களில் ஒன்று D) பின் நவீனத்துவ உத்தி

ETW ACADEMY

**37)** பொருத்துக:

(i) வரகு - 1. இலை

(ii) தாழை - 2. தாள்

(iii) கமுகு - 3. மடல்

(iv) நாணல் - 4. கூந்தல்

(v) அரசு - 5. தோகை

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 3 | 4 | 5 | 1 | 2 |
| C) | 3 | 4 | 5 | 2 | 1 |
| D) | 2 | 3 | 4 | 1 | 5 |

**38)** வேளாண்மை என்ற சொல் இடம் பெற்ற நூல்கள் எவை?

A) நற்றிணை & பதிற்றுப்பத்து
B) மதுரைக்காஞ்சி & நெடுநல்வாடை
C) தொல்காப்பியம் & நன்னூல்
D) கலித்தொகை மற்றும் திருக்குறள்

**39)** 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____

A) சீர் + இளமை
B) சீர்மை + இளமை
C) சீரி + இளமை
D) சீற் + இளமை

**40)** உலகச் சிட்டுக்குருவிகள் நாள்?

A) மார்ச் 8
B) ஏப்ரல் 5
C) மே 1
D) மார்ச் 20

**41)** கிழவனும் கடலும் என்னும் ஆங்கிலப் புதினத்தின் ஆசிரியர் யார்

A) அர்னால்ட்
B) எர்னெஸ்ட் ஹெமிங்வே
C) ஜேம்ஸ் ஆண்டர்ன்
D) ஹேக்கல்

**42)** தவறான கூற்றைக் கண்டறிக.

A) க, ச, த, ந, ப, ம ஆகிய வரிசைகளில் உள்ள எல்லா உயிர்மெய் எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.

B) ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் சில எழுத்துகள் மட்டுமே சொல்லின் முதலில் வரும்.

C) ஞ - வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ ஆகிய நான்கு எழுத்துகளும் சொல்லின் முதலில் வராது

D) ங - வரிசையில் 'ங' என்னும் ஓர் எழுத்து மட்டும் சொல்லில் முதல் எழுத்தாக வருகிறது.

**43)** கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்ட நாள்?

A) அக்டோபர் 02, 1998
B) ஜனவரி 30, 2000
C) அக்டோபர் 2, 2000
D) ஜனவரி 30, 1998

**44)** தமிழகத்தின் மிகப்பெரிய சிற்பக்கலைக் கூடம் எது?

A) காஞ்சிபுரம்
B) புதுக்கோட்டை
C) உத்திரமேரூர்
D) மாமல்லபுரம்

**45)** சிற்பக் கலை வடிவமைப்புகள் நான்கு வகைபடும். மாமல்லபுரத்தில் எத்தனை வகையான சிற்பக் கலை வடிவமைப்புகள் காணப்படுகின்றன?

A) 4
B) 3
C) 2
D) 1

ETW ACADEMY

**46)** உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியவர்?

A) திருவள்ளுவர் B) தொல்காப்பியர்

C) ஔவையார் D) பவணந்தி முனிவர்

**47)** வாயிலிருந்து இயல்பாகக் காற்று வெளிப்படும் போது பிறக்கும் எழுத்துக்கள் எவை?

A) உயிர் எழுத்துக்கள் B) மெய்யெழுத்துக்கள்

C) உயிர்மெய் எழுத்துக்கள் D) ஆய்த எழுத்து

**48)** ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு எவ்வளவு?

A) அரை மாத்திரை B) ஒரு மாத்திரை

C) இரண்டு மாத்திரை D) ஒன்றரை மாத்திரை

**49)** ஆய்த எழுத்தானது சொல்லின் இடையே மட்டும் வரும். ஆய்த எழுத்துக்கு முன் எந்த எழுத்து மட்டுமே வரும்?

A) குறில் எழுத்து B) நெடில் எழுத்து

C) வல்லின உயிர்மெய் எழுத்து D) மேற்கண்ட அனைத்தும்

**50)** இவற்றுள் கடலைக் குறிக்காத சொல்?

A) முந்நீர் B) பரவை C) அழுவம் D) மேரு

**51)** எது இல்லாதது வெறும் எலும்பும் தோலும் மட்டுமே என்பது வள்ளுவர் வாக்கு.

A) அறம் B) அறிவு C) ஆரோக்கியம் D) அன்பு

**52)** இன்னாச் சொல் பேசுவது எதைப் போன்றது?

A) விஷத்தை உன்பது B) பழையதை உன்பது C) கனியை உன்பது D) காயை உண்பது

**53)** சரியான தொடர் எது?

A) உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் மெய்யுடன் இணைந்து உயிர்மெய்யாக மட்டுமே மொழி இறுதியில் வரும்

B) ஞ், ண், ந், ம், ய் ,ர், ல், வ், ழ், ள், ன் ஆகிய மெய்யெழுத்துகள் பதினொன்றும் மொழியின் இறுதியில் வரும்

C) சொல்லின் இறுதியில் வரும் எழுத்துகளை மொழி இறுதி எழுத்துகள் என்பர்.

D) மேற்கண்ட அனைத்தும்

**54)** கடல் நீரானது ஆவியாகி, மேகமாகி, பின்னர் மேகம் குளிர்ந்து, மழையாய் பொழியும் என்ற அறிவியல் செய்தி பின்வரும் எந்த நூலில் இடம்பெறவில்லை

A) நற்றிணை & பதிற்றுப்பத்து B) திருக்குறள் & கார்நாற்பது

C) முல்லைப்பாட்டு & பரிபாடல் D) திருப்பாவை

**55)** _______இல் மட்டுமே உயிர் எழுத்துக்கள் சொல்லின் இடையிலும், இறுதியிலும் வரும்

A) அளபெடை B) இரட்டைக்கிளவி C) குற்றியலுகரம் D) அடுக்குத்தொடர்

**56)** தேசிய அறிவியல் நாள் என்று கொண்டாடப்படுகிறது?

A) பிப்ரவரி 28 B) மார்ச் 12 C) அக்டோபர் 24 D) ஜனவரி 21

ETW ACADEMY

**57)** காமராசர் எங்கு உள்ள தரைப்பாலத்தை காரணம் காட்டி மூன்று மைல் தூரத்திற்கு ஒரு பள்ளி என்ற விதியை தளர்த்த ஏற்பாடு செய்வதாக கூறினார்?

A) இடைச்செவல B) வடக்கன்பட்டி C) அருப்புக்கோட்டை D) பரமக்குடி

**58)** இந்திய நூலக விதிகளை உருவாக்கியவர்?

A) இரா.அரங்கநாதன் B) ஜேம்ஸ் வில்சன்

C) மகலநோபிஸ் D) அவிநாசி மகாலிங்கம்

**59)** அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் எந்தத் தளத்தில், அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் உள்ளது?

A) ஏழாவது தளம் B) ஐந்தாவது தளம்

C) ஆறாவது தளம் D) நான்காவது தளம்

**60)** சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய ------------ எழுத்து வரும்.

A) மெல்லினம் B) இடையினம்

C) வல்லினம் D) இவற்றில் எதுவுமில்லை

**61)** குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு _____ என்பது இன எழுத்தாகும்

A) ஈ B) இ C) எ D) ஏ

**62)** "ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார் நாற்றிசையும் செல்லாத நாடுஇல்லை" - என்னும் பாடல் இடம் பெற்ற நூல்?

A) பழமொழி நானூறு B) அறநெறிச்சாரம் C) ஆசாரக்கோவை D) மூதுரை

**63)** ஒன்றுபோலவே ஒலித்து, பொருள் வேறுபாட்டோடு உச்சரிப்பில் மட்டும் சிறிதளவு வேறுபாடுகள் உள்ளவை எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) இலக்கணப்போலிகள் B) சார்பெழுத்துக்கள்

C) மயங்கொலிகள் D) இன எழுத்துக்கள்

**64)** நாவின் நுனிப்பகுதி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ...... பிறக்கிறது.

A) ண B) ந C) ன D) ணா

**65)** கடல் நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) நற்றிணை B) பரிபாடல் C) கார் நாற்பது D) திருப்பாவை

**66)** சரியாகப் பொருந்தியுள்ளது எது?

A) வண்டி மாடு - காலை B) மரை - வேதம் C) பறவை - புல் D) பணி - வேலை

**67)** பொருந்தாதது?

A) இலை - செடியின் இலை B) இளை - மெலிந்து போதல்

C) இழை - நூல் இழை D) ஏறி - நீர் நிலை

ETW ACADEMY

68) _____ மூலம் சேர்க்கப்படும் செல்வம் வளர்வது போலத் தோன்றினாலும் முடிவில் அழிந்துவிடும்

A) உழைப்பின் மூலம்
B) சூதாட்டத்தின் மூலம்
C) களவின் மூலம்
D) கேளிக்கை மூலம்

69) நிலையான செல்வம் எதுவென திருவள்ளுவர் கூறுகிறார்?

A) ஊக்கம் B) அறிவு C) தங்கம் D) புகழ்

70) நன்மை எது என ஆராயும் அறிவு உடையவர்கள் எச்சொற்களைப் பேசமாட்டார்கள்?

A) தீங்கிழைக்கும் சொல்
B) கடுஞ்சொல்
C) சுடுசொல்
D) பயன்தராத சொல்

71) "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர் நாழி முகவாது நால்நாழி" என்ற அடிகளை இயற்றியவர் யார்?

A) தொல்காப்பியர் B) கபிலர் C) நக்கீரர் D) ஔவையார்

72) "கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின் முடி முதிர் பரதவர்" என்ற அடிகள் இடம்பெறும் நூல் எது?

A) குறுந்தொகை B) நற்றிணை C) பதிற்றுப்பத்து D) சிலப்பதிகாரம்

73) மாத்திரை என்பது எதைக் குறிக்கிறது?

A) எழுத்தின் அளவு
B) சுழியின் அளவு
C) கால அளவு
D) மேற்கண்ட அனைத்தும்

74) இவற்றில் எது சொல்லின் இறுதியில் வரும்?

A) 'ங' எழுத்து வரிசை
B) க், ங், ச், ட், த், ப், ற்
C) நொ
D) எகர வரிசையில் கெ முதல் னெ முடிய

75) பின்வருவனவற்றுள் விருதுப்பட்டி வீரர் காமராசரின் சிறப்புப்பெயர் எது?

A) பெருந்தலைவர்
B) கர்மவீரர்
C) தலைவர்களை உருவாக்குபவர்
D) மேற்கண்ட அனைத்தும்

76) வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) பதிற்றுப்பத்து B) பரிபாடல் C) குறுந்தொகை D) அகநானூறு

77) யாருடைய ஆக்கமானது தானே வழிகேட்டுக்கொண்டு செல்லும்?

A) குன்றாத அருளுடையவன்
B) பெரும் பண்புடையவன்
C) அளவில்லா அன்புடையவன்
D) தளராத ஊக்கமுடையவன்

78) பின் வருபவர்களில் தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர் யார்?

A) டாக்டர்.அப்துல் கலாம்
B) டாக்டர்.மயில்சாமி அண்ணாதுரை
C) டாக்டர்.கை.சிவன்
D) மேற்கண்ட அனைவரும்

79) உயிர்மெய் எழுத்து ஒலிக்கும் கால அளவு எதை ஒத்திருக்கும்?

A) மெய்யெழுத்தை
B) உயிர்மெய் எழுத்தை
C) குறில், நெடில் எழுத்தை
D) உயிர் எழுத்தை

80) ய வரிசையில் சொல்லின் முதலில் வரும் எழுத்துக்களின் எண்ணிக்கை?

A) 6 B) 8 C) 4 D) 5

81) தமிழ்நாட்டில் யாருடைய பிறந்தநாளானது ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படுகிறது?

A) டாக்டர் சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணன் B) கு.காமராஜ்

C) அப்துல் கலாம் D) விவேகானந்தர்

82) சுப்ரமணியனுக்கு பாரதி என்னும் பட்டம் யாரால் வழங்கப்பட்டது?

A) திருவிதாங்கூர் மன்னர் B) எட்டையபுர மன்னர்

C) திருமலை நாயக்கர் D) விஜயரகுநாத சேதுபதி

83) ஒப்புரவு என்ற சொல்லுடன் தொடர்பில்லாதது எது?

A) பிறருக்கு உதவுதல் B) அன்பாக இருத்தல்

C) மேடுபள்ளங்களை சமன்செய்தல் D) அனைவரையும் சமமாக நடத்துதல்

84) பின்வனவற்றுள் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் நூல் அல்லாதது எது?

A) கொய்யாக்கனி B) பாவியக்கொத்து C) தேவநேயம் D) நூறாசிரியம்

85) சோழனுக்கு உரிய மாலை?

A) பனம்பூ B) வேம்பு C) பூவரசு D) அத்தி

86) பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------

A) பொறுமை + உடைமை B) பொஉறை + உடைமை

C) பொறு + யுடைமை D) பொறை + உடைமை

87) பறவை வலசை போதலைப் பற்றி "தென்திசைக் குமரிஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்" என்று பாடிய சத்திமுத்தப்புலவர் சுமார் எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டவர்?

A) 1000 B) 1500 C) 2000 D) 2500

88) "துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேணும் - நீ சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேணும்" - என்று பாடியவர்?

A) முன்றுரை அரையனார் B) பாரதிதாசனார்

C) பாரதியார் D) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்

89) திருவள்ளுவராண்டைக் கணக்கிட நடைமுறை ஆண்டுடன் எதைக் கூட்டிக்கொள்ள வேண்டும்?

A) 41 B) 30 C) 31 D) 40

90) தமிழ் என்ற சொல் முதன் முதலில் இடம்பெற்ற "தமிழென் கிளவியும் அதனோ ரற்றே" என்ற தொடர் இடம்பறும் நூல் எது?

A) சிலப்பதிகாரம் B) தேவாரம் C) திருவாசகம் D) தொல்காப்பியம்

91) ஆர்டிக் ஆலா, எவ்வளவு தூரம் பயணம் செய்கிறது?

A) 22,000 கி.மீ B) 25,000 கி.மீ C) 20,000 கி.மீ D) 28,000 கி.மீ

**92)** டீப் புளூ (Deep blue) என்னும் மீத்திறன் கணினியை (Super Computer) உருவாக்கிய நிறுவனம் எது?

A) ஆப்பிள் B) ஐ.பி.எம் C) மைக்ரோசா∴ப்ட் D) இன்∴போசிஸ்

**93)** கல்விக் கண் திறந்த காமராசர் என்று மனதாரப் பாராட்டியவர் யார்?

A) ராஜாஜி B) பெரியார் C) அண்ணா D) கலைஞர்

**94)** மாமல்லபுரத்திலுள்ள சிற்பங்களில் சிற்பக்கலையின் உச்சமாகக் கருதப்படுவது எது?

A) அர்ச்சுணன் தபசு B) திருக்கடல் மல்லை C) புலிக்குகை D) குடைவரை

**95)** மொழியை கணினியில் பயன்படுத்த வேண்டும் என்றால் அது எதன் அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்?

A) பிக்சல்களின் அடிப்படையில் B) எண்களின் அடிப்படையில்

C) கிரே கோட் அடிப்படையில் D) படங்களின் அடிப்படையில்

**96)** 'மாமல்லபுர கடற்கரையையே சிற்பக்கலைக் கூடமாக மாற்றிவிடலாம்' என்று கூறியவர்?

A) சிம்ம விஷ்ணு B) இராஜசிம்மன்

C) நரசிம்மவர்மன் D) மகேந்திரவர்மன்

**97)** "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" என்ற பாடல் இடம்பெறும் நூல்?

A) தொல்காப்பியம் B) திருக்குறள் C) பரிபாடல் D) தேவாரம்

**98)** மெய் எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு எவ்வளவு?

A) அரை மாத்திரை B) ஒரு மாத்திரை

C) இரண்டு மாத்திரை D) ஒன்றரை மாத்திரை

**99)** அண்ணா நூற்றாண்டு நூலகத்தை கருத்தில்கொண்டு பொருத்துக.

(i) ஐந்தாவது தளம் - 1. வரலாறு, சுற்றுலா

(ii) ஆறாவது தளம் - 2. நூலகத்தின் நிர்வாகப் பிரிவு

(iii) ஏழாவது தளம் - 3. பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை

(iv) எட்டாவது தளம் - 4. கணிதம், அறிவியல், மருத்துவம்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 1 | 2 | 4 | 3 |

**100)** இவர்களுள் "கயத்தூரில்" பிறந்தவர்?

A) முன்றுரை அரையனார் B) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

C) சேக்கிழார் D) பெருவாயின் முள்ளியார்

**101)** ராவி நதிக்கரை மணல் திட்டுகளை ஆங்கிலேயர்கள் அகழ்வாராய்ச்சி செய்ய ஆரம்பித்த வருடம் எது?

A) 1921 B) 1920 C) 1867 D) 1901

**102)** ஹரப்பா முத்திரையில் உள்ள யோக நிலையில் அமர்ந்திருக்கும் கடவுளின் உருவம் எதை ஒத்திருக்கிறது என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்?

A) சிவனுக்குரிய "திருமுகம்" (மூன்றுமுகம்) B) பசுபதி(விலங்குகளின் கடவுள்)
C) யோகேசுவரன் (யோகிகளின் கடவுள்) D) மேற்கண்ட அனைத்தும்

**103)** 1946 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அரசமைப்பு நிர்ணய மன்றத்தில் இருந்த சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன?

A) 389 B) 292 C) 93 D) 15

**104)** பின்வரும் கூற்றுகளில் எது (வை) சரி?

1. அரசியலமைப்பின் பாதுகாவலன் - குடியரசுத்தலைவர்
2. இந்திய அரசியலமைப்பின் மகாசாசனம் என்றழைக்கப்படும் பகுதி - பகுதி I
3. மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய் என்று கூறுவது அரசியலமைப்பின் பகுதி III

A) 1 & 2 B) 2 & 3
C) 1 & 3 D) மேற்கண்ட எதுவுமில்லை

**105)** எந்த சூழ்நிலையிலும் சட்டப்பிரிவு ____ மற்றும் ____ இன் கீழ் வழங்கப்பட்ட உரிமைகளை தடை செய்யமுடியாது.

A) 352, 19 B) 20, 21 C) 79, 80 D) 32, 29

**106)** 1969இல் மத்திய-மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய தமிழக அரசு அமைத்தக் குழு?

A) இராஜமன்னார் குழு B) சர்க்காரியா குழு
C) பூஞ்சி குழு D) வேங்கடசெல்லையா குழு

**107)** IMF இன் அக்டோபர் 2016 அறிக்கையின்படி, தொழில்மயமாதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் முன்னேறிக்கொண்டிருக்கும் நாடுகளில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி எவ்வளவு?

A) 5% B) 7% C) 11% D) 13%

**108)** இந்தியாவில் தற்போது அனைத்து மருத்துவ நடைமுறைகளும் பின்வரும் இதன் கீழ் உள்ளன

A) ஏய்ம்ஸ் AIIMS B) MHRD C) ஆயுஷ் AYUSH D) யூஜிசி UGC

**109)** மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று அரசியலமைப்பின் எந்த உறுப்பு விளக்குகிறது?

A) 324 B) 325 C) 326 D) 329

**110)** இந்திய தேர்தல் ஆணையத்தின் பணிகள் / அதிகாரங்களில் சேராதது எது?

1. வாக்காளர் பட்டியல் தயாரித்தல்
2. வாக்காளர் பட்டியலை திருத்துதல்
3. மாநில சட்டமன்ற சபாநாயகர் தேர்தலை நடத்துதல்
4. தொகுதிக்கான இடங்களை ஒதுக்கீடு செய்தல் & தேர்தல் நடத்துதல்
5. உள்ளாட்சி தேர்தல்களை நடத்துதல்

A) 1, 2 & 4 B) 2, 3 & 5 C) 1, 2, 3 & 5 D) 2, 3, 4 & 5

**111)** கூற்று: இந்தியா ஒரு துணைக்கண்டம் என அழைக்கப்படுகிறது

காரணம்: இயற்கை நில அமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம், கனிமங்கள் மற்றும் மனித வளங்கள் போன்றவற்றில் ஒரு கண்டத்தில் காணப்படகூடிய வேறுபாடுகளை இந்தியா கொண்டுள்ளது.

A) கூற்றும், காரணமும் சரி; மேலும் காரணம் சரியான விளக்கமே.

B) கூற்றும், காரணமும் சரி; ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல.

C) கூற்று தவறு காரணம் சரி

D) கூற்று சரி, காரணம் தவறு

**112)** தீபகற்ப பீடபூமியை இரு பெரும் பகுதிகளாக பிரிக்கின்ற ஆறு?

A) மகாநதி B) பாகிரதி C) கிருஷ்ணா D) நர்மதா

**113)** இலட்சத்தீவுகளின் பரப்பளவு?

A) 3212 ச.கி.மீ B) 32 ச.கி.மீ C) 4212 ச.கி.மீ D) 42 ச.கி.மீ

**114)** அலகாபாத் தூண் கல்வெட்டு, யாருடைய ஆட்சிக்கான மிக முக்கிய சான்று

A) குமாரகுப்தர் B) இரண்டாம் சந்திரகுப்தர்

C) சமுத்திரகுப்தர் D) முதலாம் சந்திரகுப்தர்

**115)** யாருடைய காலத்தில் சீனத் துறவி பாகியான் இந்தியாவிற்கு வந்தார்?

A) இரண்டாம் சந்திரகுப்தர் B) முதலாம் சமுத்திரகுப்தர்

C) ஸ்ரீகுப்தர் D) குமார குப்தர்

**116)** வெப்பநிலை மாறாமல் உள்ளபோது, குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவின் அழுத்தம் அதன் கன அளவிற்கு எதிர்த்தகவில் இருக்கும் என்று கூறும் விதி?

A) பாஸ்கல் விதி B) பாயில் விதி

C) சார்லஸ் விதி D) டாப்ளர் விளைவு

**117)** அலைக்கொள்கையை தந்தவர்

A) மாக்ஸ்வெல் B) லார்டராலே C) மேக்மில்லன் D) பெர்னௌலி

**118)** 2020ஆம் ஆண்டிற்கான தந்தைப் பெரியார் விருது வென்றவர்?

A) வரகூர் அருணாச்சலம்

B) முனைவர் வைகைச்செல்வன்

C) முனைவர் ச.தேவராஜ்

D) அ.தமிழ்மகன் உசேன்

**119)** காவிரி-குண்டாறு திட்டத்தால் பயனடையும் மாவட்டம்?

A) கடலூர் B) விருதுநகர்

C) ராமநாதபுரம் D) விழுப்புரம்

ETW ACADEMY

**120)** பின்வரும் கூற்றையும் காரணத்தையும் ஆராய்ந்து சரியான விடையைத் தேர்க:

கூற்று: சிந்துவெளி நாகரிகத்தின் பிற நாகரிங்கள் அனைத்தும் ஹரப்பா நாகரிகம் என்றே ஆய்வு செய்யப்பட்டன.

காரணம்: ஹரப்பா நகர்தான் சிந்துவெளி நாகரிங்களிலேயே மிகப்பெரியது.

A) கூற்றும் காரணமும் சரி. மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்

B) கூற்று தவறு. காரணம் சரி

C) கூற்று சரி. காரணம் தவறு

D) கூற்றும் காரணமும் தவறு

**121)** பின்வரும் வாக்கியங்களில் சரியானவை?

1. ஹரப்பா நகரத்தின் இடிபாடுகளை முதன்முதலில் தனது நூலில் விவரித்தவர் சார்லஸ் மேசன்
2. ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ அகழ்வாய்வுகளை மேற்கொண்ட தொல்லியலாளர் சர் ஜான் மார்ஷல்
3. சிந்துவெளி நாகரிகமானது, வேதகாலத்துக்கு முற்பட்டது எனக்கூறியவர் அலெக்சாண்டர் கன்னிங்காம்

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) 1, 2 & 3

**122)** தமிழ்நாட்டின் ஆரணி, கொற்கை, மைலம், மானூர், நாகல், தொண்டி, கண்டிகை போன்ற இடப்பெயர்கள், தற்போதைய ____இல் வழக்கத்தில் உள்ளன.

A) ஆப்கானிஸ்தான் B) பலுசிஸ்தான் C) நேபாளம் D) பாகிஸ்தான்

**123)** அரசியலமைப்பின் எந்த சட்டத்திருத்தம் 'சிறிய அரசியலமைப்பு' என அறியப்படுகிறது?

A) 40 B) 42 C) 44 D) 43

**124)** முழுமையான அரசமைப்பு சட்டம் தயாரான நாள் / அது இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் எது?

A) 1949, நவம்பர் 26 B) 1947, ஜனவரி 22

C) 1950, நவம்பர் 26 D) 1950, ஜனவரி 24

**125)** நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் கூட்டுக்கூட்டமானது எந்த நாட்டின் அரசியமைப்பிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது?

A) அமெரிக்கா B) பிரிட்டன்

C) பிரான்ஸ் D) ஆஸ்திரேலியா

**126)** சட்டப்பிரிவு 32-ஐ, டாக்டர் அம்பேத்கர் எவ்வாறு அழைக்கிறார்?

A) தேவையற்ற வார்த்தை B) புதுமையான சிறப்பம்சம்

C) அரசியலமைப்பின் பாதுகாவலன் D) மேற்கண்ட எதுவுமில்லை

**127)** உலகப் பொருளாதாரத்தில், வாங்கும் சக்தியின் அடிப்படையில் இந்தியா வகிக்கும் இடம் என்ன?

A) ஆறாமிடம் B) மூன்றாமிடம் C) எட்டாமிடம் D) ஐந்தாமிடம்

**128)** மக்கள் தொகை உயர்வு வீதம் 1.96% ஐப் பெற்றதால், ”மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு” என்று அழைக்கப்படும் ஆண்டு?

A) 1951 B) 1961 C) 1971 D) 1981

ETW ACADEMY

**129)** உலகளவில் நிலக்கரி உற்பத்தியில் இந்தியா வகிக்கும் இடம் எது?

A) முதலிடம் B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

**130)** குடியரசுத்தலைவருக்கான நேரடித் தேர்தலுக்கு உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் வாக்கு முறை எது?

A) தொகுதி வாக்கு (BV) B) கட்சித் தொகுதி வாக்கு (PBV)

C) மாற்று வாக்கு (AV) D) இரு சுற்று முறை (TRS)

**131)** எந்த அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் மூலமாக இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயது 21லிருந்து 18 ஆக குறைக்கப்பட்டது?

A) 9வது சட்டத்திருத்தம், 1960 B) 61வது சட்டத்திருத்தம், 1988

C) 69வது சட்டத்திருத்தம், 1991 D) 72வது சட்டத்திருத்தம், 1992

**132)** தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர், அமைச்சர்கள் செய்யக்கூடாதது எதை?

1. எவ்வகை திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுதல்
2. முக்கிய கொள்கை முடிவுகளை எடுத்தல்
3. பொது சேவை வசதிகளுக்கான வாக்குறிதி அறிவித்தல்
4. ஏற்கனவே அறிவித்திருந்த பொது சேவைகளை தொடர்தல்

A) 1 ஐத் தவிர அனைத்தும் B) 2ஐத் தவிர அனைத்தும்

C) 3ஐத் தவிர அனைத்தும் D) 4ஐத் தவிர அனைத்தும்

**133)** இந்தியாவின் மத்திய தீர்க்கரேகை _______ வழியாக செல்கிறது?

A) அகமதாபாத் B) மிர்சாபூர் C) அலகாபாத் D) லக்னோ

**134)** இந்தியாவின் வடமுனை ____ என அழைக்கப்படுகிறது

A) இந்திராமுனை B) லடாக் போல் C) இந்திராகோல் D) ரான் ஆ்ஃப் கட்ச்

**135)** இந்தியாவிலேயே மிகப்பழமையான மடிப்பு மலைத்தொடர் எது?

A) ஆரவல்லி மலைத்தொடர் B) இமாத்ரி மலைத்தொடர்

C) சிவாலிக் மலைத்தொடர் D) சக்ரோசு மலைத்தொடர்

**136)** அறுவை சிகிச்சை செய்முறையைப் பற்றி விளக்கிய முதல் இந்தியர்?

A) சுஸ்ருதர் B) சாரக்கர் C) தன்வந்திரி D) பாலகாப்யா

**137)** குப்தர்களின் பொற்காசுகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

A) ஹிரண்யா B) போகா C) தினரா D) பலி

**138)** தேசிய வேதியியல் ஆய்வகம் எங்குள்ளது?

A) டெல்லி B) மும்பை

C) சென்னை D) பூனே

**139)** கடலில் புயல் ஏற்படும்போது அலையின் வீரியத்தைக் குறைக்கச்செய்வது?

A) தந்துரிக் கவர்ச்சி
B) ஓரினக் கவர்ச்சி விசை
C) பரப்பு இழுவிசை
D) வேறினக் கவர்ச்சி விசை

**140)** பூகம்பத்தை அளவிடப் பயன்படுவது?

A) அனிமாமீட்டர்
B) சிஸ்மோக்ராஃப்
C) குவார்ட்ஸ் கடிகாரம்
D) பைரோமீட்டர்

**141)** தேசிய பெண் குழந்தைகள் தினம்

A) ஜனவரி 20
B) ஜனவரி 21
C) ஜனவரி 22
D) ஜனவரி 24

**142)** கோவிஷீல்ட் தடுப்பூசியை உற்பத்தி செய்யும் இந்திய நிறுவனம் எது?

A) சீரம்
B) பாரத் பயோடெக்
C) A & B
D) ஏதுமில்லை

**143)** சர் ஜான் மார்ஷல் சிந்துவெளி நாகரிகத்தை எந்த நாகரிகத்துடன் ஒப்பிடுகிறார்?

A) ஆரிய நாகரிகம்
B) திராவிட நாகரிகம்
C) நாகர் இன நாகரிகம்
D) சரஸ்வதி சிந்து நாகரிகம்

**144)** எந்த திராவிட மொழி இன்றளவும் பலுசிஸ்தானில் பேசப்பட்ட வருகிறது?

A) பிராகுயி
B) கோத்தா
C) மால்தோ
D) தோண்டி

**145)** சிந்துவெளி நாகரிகத்தை தோற்றுவித்த பெருமக்கள் திராவிடர்களாகத் தான் இருக்கவேண்டும் என்பது யாருடைய கருத்தல்ல?

A) ஐராவதம் மகாதேவன்
B) ஆர்.டி.பானர்ஜி
C) சமீபத்தில் மறைந்த நாகநாதன்
D) ஹீராசு பாதிரியார்

**146)** தமிழ் மன்னர்களை "திரமிள ராஜாக்கள்" என்று குறிப்பிட்டவர்?

A) கங்காதேவி
B) யவனர்கள்
C) நந்திவர்ம பல்லவன்
D) யுவான் சுவாங்

**147)** எந்த அரசியலமைப்பு உறுப்பின்படி, இந்திய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் குடியரசுத்தலைவரையும் ஈரவைகளையும் கொண்டது ஆகும்?

A) உறுப்பு 49
B) உறுப்பு 58
C) உறுப்பு 79
D) உறுப்பு 84

**148)** நேருவின் குறிக்கோள் தீர்மானமானது இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள்?

A) 1948 ஜனவரி 2
B) 1947 ஜனவரி 22
C) 1929 டிசமபர் 16
D) 1930 ஜனவரி 26

**149)** தற்போது சொத்துரிமையானது அரசியலமைப்பின் பகுதி _____ இல், பிரிவு _____ன் கீழ் ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது

A) XI, 300 ஆ
B) XII, 300 ஆ
C) XI, 300 அ
D) XII, 300 அ

**150)** பின்வரும் கூற்றுகளில் சரியானது எது

A) அம்பேத்கர் மிகச்சிறந்த பொருளியல் அறிஞர்

B) சட்டம் மற்றும் அரசியலில் அம்பேத்கரது அளப்பரிய பங்களிப்புகள் அவருடைய பொருளாதார பங்களிப்பை குறைத்து காட்டி விட்டன

C) எல்லாவற்றுக்கும் மேலாக அம்பேத்கர் மிகச்சிறந்த சமூக சீர்திருத்தவாதி

D) இவை அனைத்தும்

**151)** காந்தியப் பொருளாதாரம் என்ற கருத்தை உருவாக்கியவர் யார்

A) VKRV ராவ் B) அமெர்தியா சென்

C) ஜே சி குமரப்பா D) ஜெவகர்லால் நேரு

**152)** சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களாக DR காட்கில், CN வக்கீல், மற்றும் VKRV ராவ் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் சிறந்த கனவுகளோடும் இந்திய பொருளாதார பிரச்சனைகளை ஆராய்ந்து கொள்கைகளையும் திட்டங்களையும் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக வழங்கியிருக்கிறார்கள் என்றவர் யார்

A) கிருஷ்ணா ஷெட்டி B) பிங்கல் ராய்

C) பிஆர் பிரம்மானந்தா D) இராமச்சந்திர குகா

**153)** சுதந்திர இந்தியாவில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில், மொத்த தொகுதிகளின் எண்ணிக்கை என்ன?

A) 489 B) 454 C) 545 D) 401

**154)** மக்களாட்சியில் தகவல்களைப் பெறும் உரிமை என்பது

1. முழுமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது
2. இன்னும் முழுமையாக அங்கீகரிக்கப்பட இல்லை
3. மக்களாட்சி என்னும் கருத்தாக்கதிலிருந்து வெளிப்படக்கூடிய இயற்கை உரிமையாகும்
4. மக்களாட்சி என்னும் கருத்தாக்கதிலிருந்து வெளிப்படக்கூடிய இயற்கை உரிமையல்ல

A) 2ம் 4ம் மட்டும் B) 1ம் 4ம் மட்டும் C) 1ம் 3ம் மட்டும் D) 2ம் 3ம் மட்டும்

**155)** ட்ரான்ஸ் இமையமலையின் பரப்பளவு எங்கு அதிகம்?

A) அருணாச்சல் B) திபெத் C) நேபாளம் D) பாகிஸ்தான்

**156)** கிழக்கு தொடர்ச்சி மலைகளும், மேற்கு தொடர்ச்சி மலைகளும், கர்நாடக, தமிழ்நாடு எல்லையிலுள்ள ________ மலையில் ஒன்றினைகின்றன.

A) பழனி B) சேர்வராயன் C) நீலகிரி D) கொல்லி

**157)** சாத்ராதித்யர் என்று அழைக்கப்பட்ட குப்த அரசர் யார்?

A) ஸ்ரீ குப்தர்

B) முதலாம் சமுத்திரகுப்தர்

C) குமார குப்தர்

D) இரண்டாம் சந்திரகுப்தர்

ETW ACADEMY

**158)** 'போகா' என்ற வரி விதிப்பு என்ன?

A) விளைச்சலில் அரசன் பெறும் வழக்கமான ஆறில் ஒரு பங்கு வரி

B) அரசருக்கு கிராமங்கள் அவ்வப்போது வழங்க வேண்டிய பழங்கள், விறகு, பூக்கள்

C) கிராமத்தினரின் மீது குறிப்பிட்ட கால இடைவெளியில் விதிக்கப்படும் ஒரு வரி

D) ஆரம்பத்தில் விருப்பப்பட்டு வழங்கப்பட்ட வரியான இருந்து பின்னர் கட்டாய வரியாக மாற்றப்பட்ட ஒடுக்குமுறை வரி

**159)** பின்வரும் வாக்கியங்களில் தவறானது எது?

A) சிந்துவெளி நாகரிகத்தில் கோட்டை அமைந்திருந்த இடம் மேற்கே மேடான பகுதியில்

B) சிந்துவெளி நாகரிகத்தில் குடியிருப்புப் பகுதிகள் கிழக்கே அமைந்திருந்தன

C) பொதுக்குளியல் குளம் ஹரப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டது

D) சிந்துவெளியி நாகரிக தானியக்களஞ்சியம் கண்டுபிடிக்கப்பட்ட மாநிலம் ஹரியானா

**160)** ஹரப்பாவில் காணப்பட்ட தானியக்களஞ்சியத்தின் இரு நெடுஞ்சுவர்களுள் ஒவ்வொரு வரிசையிலும் எத்தனை மண்டபங்கள் இருந்தன?

A) 6 B) 8 C) 22 D) 4

**161)** சிந்துவெளி மக்கள் நிலத்தை இரு வழியாக உழுததற்கான அடையாளங்கள் எங்கு காணப்படுகின்றன?

A) காளிபங்கன் B) லோத்தல் C) சாங்குதாரோ D) கோட்டிஜி

**162)** பொருந்தா இணை எது?

A) உறுப்பு 19 - பேச்சுரிமை

B) உறுப்பு 16 - சமவாய்ப்பு

C) உறுப்பு 21அ - தொடக்கக் கல்வி

D) உறுப்பு 15 - சட்டத்தின் முன் அனைவரும் சமம்

**163)** தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும்போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல், பகுதி IIIல் எப்பிரிவு ஆகும்?

A) 18 B) 27 C) 32 D) 41

**164)** இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் சேர்க்கப்பட்ட ஆண்டு மட்டும் சட்டத்திருத்தம் என்ன?

A) 1976, 42 வது B) 1978, 44 வது C) 1976, 44 வது D) 1978, 42 வது

**165)** ராவ் அவர்களின் பின்வரும் எந்த ஆய்வுக்கட்டுரை, வேலைவாய்ப்புத் துறையில் மிகச் சிறந்த ஒன்றாக கருதப்படுகிறது

A) உபரி வேலைவாய்ப்பும், பொருளாதார முன்னேற்றமும்

B) முழு வேலை வாய்ப்பும், பொருளாதார முன்னேற்றமும்

C) வேலைவாய்பின்மையும், பொருளாதார சிக்கலும்

D) பண்ணாட்டு உதவியும், பொருளாதார முன்னேற்றமும்

ETW ACADEMY

**166)** அமர்த்தியா சென் அவர்களின் கருத்துப்படி திறன் என்பது

A) அடிப்படை கச்சாப் பொருட்களை மக்கள் நலத்திற்காக மாற்றியமைப்பது

B) மக்களை அடிப்படை கச்சாப் பொருட்களை சார்ந்து மாற்றுவது

C) கச்சாப் பொருட்களுக்கு ஏற்றவாறு மக்களை குடிபெயரச்செய்வது

D) இவையனைத்தும்

**167)** தலைமைத் தேர்தல் ஆணையரை எவ்வாறு பதவி நீக்கம் செய்யமுடியும்?

A) நாடாளுமன்ற பதவி நீக்கத் தீர்மாண வெற்றியின் மூலம்

B) பிற தேர்தல் ஆணையர்களின் பரிந்துரை மூலம்

C) குடியரசுத்தலைவரின் பரிந்துரை மூலம்

D) இந்திய தலைமை நீதிபதியின் பரிந்துரை மூலம்

**168)** தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேச எல்லையில் அமைந்துள்ள ஏரி?

A) புலிகாட் ஏரி B) கொல்லேறு ஏரி C) சிலிகா ஏரி D) வேம்பநாடு ஏரி

**169)** குப்தர் கால வணிகக் குழுக்கள் வங்கிகளின் பங்கினை ஆற்றியதை நாம் எதன் மூலம் அறிய முடிகிறது?

A) அலகாபாத் தூண் B) மெக்ராலி இரும்புத்தூண்

C) குதுப்மினார் D) மண்டசோர் கல்வெட்டு

**170)** நாணயங்களில் முதன்முதலில் இடம்பெற்ற குப்த அரசர் யார்?

A) கடோத்கஜர் B) ஸ்ரீகுப்தர்

C) முதலாம் சந்திரகுப்தர் D) முதலாம் சமுத்திரகுப்தர்

**171)** சிந்துவெளி நாகரிகம் நகர நாகரிகம் என்பதை உறுதி செய்தவர் யார்?

A) சர் ஜான் மார்ஷல் B) சார்லஸ் மேசன்

C) சர். மார்டிமர் வீலர் D) அலெக்சாண்டர் கன்னிங்காம்

**172)** பழைய பஞ்சாபின் மாண்ட்கொமரி மாவட்டத்தில் இரவி - சட்லெஜ் ஆறுகளுக்கு இடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடம்?

A) ஹரப்பா B) மொகஞ்சதாரோ C) காலிபங்கன் D) சாங்குதாரோ

**173)** சிந்துவெளியில் கிடைத்த பொருட்களையும் அவை கிடைக்கப்பெற்ற இடங்களையும் பொருத்துக:

(i) சுண்ணாம்புக்கல் - 1. லோத்தல்

(ii) வைடூரியம் - 2. நாகேஷ்வர்

(iii) செம்மணிக்கல் - 3. தெற்கு ராஜஸ்தான்

(iv) சங்கு - 4. ஷார்டுகை

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1 |

ETW ACADEMY

**174)** இந்திய அரசியலமைப்பின் எந்த அட்டவணை, மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பகிர்வினைப் பற்றி கூறுகிறது?

A) 12வது B) 11வது C) 8வது D) 7வது

**175)** இந்தியாவையும், இலங்கையையும் பிரிக்கும் குறுகிய ஆழமற்ற கடல் பகுதி ______ ஆகும்

A) லங்கா ஜலசந்தி B) லங்கா நீர்சந்தி

C) பாக் நீர்சந்தி D) பாக் நிலசந்தி

**176)** A என்பவர் ஒரு வேலையை 20 நாட்களிலும், B என்பவர் ஒரு வேலையை 20 நாட்களிலும் செய்து முடிப்பார்கள். அவ்விருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்துமுடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?

A) 12 நாட்கள் B) 14 நாட்கள் C) 16 நாட்கள் D) 20 நாட்கள்

**177)** ஒரு ஆண் ஒரு வேலையை 4 நாட்களில் செய்து முடிப்பார். ஒரு பெண் அதே வேலையை 12 நாட்களில் செய்து முடிப்பார். அவ்வேலையை இருவரும் சேர்ந்து எத்தனை நாட்களில் முடிப்பார்கள்?

A) 6 நாட்கள் B) 5 நாட்கள் C) 4 நாட்கள் D) 3 நாட்கள்

**178)** ஒரு வேலையை ராம், ரகீம் இருவரும் சேர்ந்து 8 நாட்களில் முடிப்பர். ராம் மட்டும் 12 நாட்களில் தனியே முடிப்பார் எனில் ரகீம் மட்டும் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

A) 20 B) 23 C) 22 D) 24

**179)** ஒரு வேலையை ராதா, கீதா ஆகிய இருவரும் சேர்ந்து 12 நாட்களில் முடிப்பர். ராதா மட்டும் அவ்வேலையை தனியாக 20 நாட்களில் முடிப்பார் எனில் கீதா மட்டும் தனியாக அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

A) 24 B) 30 C) 36 D) 28

**180)** சுரேஷ் மற்றும் ரமேஷ் சேர்ந்து ஒரு வேலையை 15 நாட்களில் செய்து முடிப்பர். இதே வேலையை ரமேஷ் மட்டும் தனியாக 45 நாட்களில் செய்து முடிப்பார் எனில்

A) ரமேஷை விட சுரேஷ் இரு மடங்கு நல்ல வேலைக்காரர்

B) சுரேஷை விட ரமேஷ் இரு மடங்கு நல்ல வேலைக்காரர்

C) ரமேஷை விட சுரேஷ் மும்மடங்கு நல்ல வேலைக்காரர்

D) சுரேஷை விட ரமேஷ் மும்மடங்கு நல்ல வேலைக்காரர்

**181)** கலா என்பவர் ஒரு வேலையை 20 நாட்களிலும், பிருந்தா என்பவர் அதே வேலையை 30 நாட்களிலும் முடிப்பர். இருவரும் சேர்ந்து அவ்வேலையை முடித்து ரூ.600 ஐ தங்களது வருவாயாகப் பெற்றனர் எனில், கலா மற்றும் பிருந்தாவின் பங்கு என்ன?

A) 240, 360 B) 300, 300 C) 360, 240 D) 400, 200

**182)** திலிப் ஒரு வேலையை 10 நாட்களிலும், தினேஷ் அதை 15 நாட்களிலும் செய்து முடிப்பர். இருவரும் சேர்ந்து அவ்வேலையை செய்து ரூ.1500 ஐ ஈட்டினால், அத்தொகையை எவ்வாறு பிரித்துக்கொள்வர்?

A) 700, 800 B) 500, 1000 C) 600, 900 D) 800, 700

**183)** X ஒரு வேலையை 18 நாட்களிலும், Y அதை 24 நாட்களிலும் செய்து முடிப்பர். இருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்து ரூ.42,000 ஈட்டினால், Yக்கு கிடைக்கும் தொகை எவ்வளவு?

A) 24000 B) 18000 C) 20000 D) 22000

**184)** A, Bஜப் போல இரண்டு மடங்கு திறமையான நல்ல வேலையாள். அவர்கள் இருவரும் ஒரு வேலையை 18 நாட்களில் முடிக்கிறார்கள். A மட்டும் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

A) 24 B) 25 C) 26 D) 27

**185)** A, B-ஐ விட 2 மடங்கு வேகமாக வேலை செய்வார். B-ஆல் ஒரு வேலையை தனியாக முடிக்க 12 நாட்கள் ஆனால், A மற்றும் B சேர்ந்து அந்த வேலையை முடிக்க ஆகும் நாட்கள்?

A) 4 B) 6 C) 8 D) 18

**186)** 12 நாட்களில் A என்பவர் ஒரு வேலையை முடிக்கிறார். B என்பவர் Aயை விட 60% திறமையானவர் எனில் B தனியாக அதே வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

A) 7 B) 8 C) 7 1/2 D) 6

**187)** ஒரு வேலையை குமார் என்பவர் 16 நாட்களில் முடிப்பார். ராஜா என்பவர் குமாரை விட 60% அதிக திறமையுடைவர் எனில் முழு வேலையையும் முடிக்க ராஜாவிற்கு தேவைப்படும் நாட்கள்?

A) 16 B) 12 C) 10 D) 15

**188)** ஒரு குறிப்பிட்ட வேலையை A 30 நாட்களுக்குள் முடிப்பார். மேலும் B தனியாக அந்த வேலையை 25 நாட்களில் முடிப்பார். A வேலையைத் தொடங்கி 10 நாட்கள் கழித்து B சேர்கிறார் எனில் அந்த வேலை எத்தனை நாட்களில் முடியும்?

A) 12 1/2 B) 14 2/9 C) 9 1/11 D) 6 2/3

**189)** தீபா மற்றும் அருண் ஆகியோர் ஒரு வேலையை முறையே 20 மற்றும் 30 நாட்களில் செய்து முடிப்பர். அவர்கள் இருவரும் இணைந்து வேலை செய்யத் தொடங்குகின்றனர். வேலை முழுவதுமாக முடிவதற்கு 5 நாட்களுக்கு முன்பு தீபா நின்று விடுகிறார். அருண் தனியாக வேலை செய்து அந்த வேலையை முடிக்கிறார் எனில் அந்த வேலை எத்தனை நாட்களில் முடிவடையும்?

A) 15 B) 18 C) 12 D) 20

**190)** A மற்றும் B ஆகியோர் தனித்தனியே ஒரு வேலையை 8 மற்றும் 20 நாட்களில் முறையே முடிப்பார்கள். இருவரும் சேர்ந்து 4 நாட்கள் வேலை செய்த பின் முடிக்கப்பட வேண்டிய வேலையின் பாகம் என்னவாக இருக்கும்?

A) 7/10 B) 3/10 C) 10/7 D) 10/3

**191)** A மற்றும் B இருவரும் ஒரு வேலையை செய்கின்றனர். A, 12 நாட்களில் அவ்வேலையை முடிக்க முடியும். B ஆனவர் அதே வேலையை 20 நாட்களில் முடிக்க முடியும். A B இருவரும் சேர்ந்து 3 நாட்கள் வேலை செய்தபின் A சென்றுவிட்டார். மீதி வேலையை B எத்தனை நாட்களில் முடிப்பார்?

A) 9 B) 10 C) 12 D) 17

ETW ACADEMY

**192)** ரமா மற்றும் சீமா முறையே ஒரு வேலையை 40 மற்றும் 60 நாட்களில் தனித்தனியாக செய்து முடிப்பார்கள். 8 நாட்கள் அவர்கள் சேர்ந்து வேலை செய்த பின் ரமா விலகுகிறார் எனில் அந்த வேலை முடிய எத்தனை நாட்கள் ஆகும்?

A) 48 B) 44 C) 46 D) 40

**193)** A, B இருவரும் ஒரு வேலையை 12 நாட்களில் செய்து முடிப்பர். B, C அதே வேலையை 15 நாட்களில் செய்து முடிப்பர். C, A அதே வேலையை 20 நாட்களில் செய்து முடிப்பர். மூவரும் சேர்ந்து அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?

A) 10 B) 15 C) 20 D) 25

**194)** A, B இருவரும் ஒரு வேலையை 18 நாட்களில் செய்து முடிப்பர். B, C அதே வேலையை 24 நாட்களில் செய்து முடிப்பர். C, A அதே வேலையை 36 நாட்களில் செய்து முடிப்பர். மூவரும் சேர்ந்து அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?

A) 16 B) 12 C) 13 D) 26

**195)** A, B இருவரும் ஒரு வேலையை 6 நாட்களில் செய்து முடிப்பர். B, C அதே வேலையை 10 நாட்களில் செய்து முடிப்பர். C, A அதே வேலையை 7 1/2 நாட்களில் செய்து முடிப்பர். மூவரும் சேர்ந்து அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?

A) 5 B) 4 1/2 C) 4 D) 3

**196)** A, B, C ஆகியோர் ஒரு வேலையை முடிக்க முறையே 24, 6, 12 நாட்கள் எடுத்துக்கொள்வர் எனில், அதே வேலையை அவர்கள் அனைவரும் இணைந்து செய்து முடிக்க எத்தனை நாட்கள் தேவைப்படும்?

A) 1/24 B) 7/24 C) 24/7 D) 24/11

**197)** A, B, C மூவரும் சேர்ந்து ஒரு வேலையை 4 நாட்களில் முடிப்பர். A தனியே 12 நாட்களிலும், B தனியே 18 நாட்களிலும் அவ்வேலையை முடித்தால் C தனியே அவ்வேலையை முடிக்க எவ்வளவு நாட்கள் ஆகும்?

A) 10 B) 12 C) 9 D) 18

**198)** ஆறு ஆட்கள் ஒரு வேலையை 50 நாட்களில் முடிப்பர் எனில் 10 ஆட்கள் எத்தனை நாட்களில் அந்த வேலையை முடிப்பர்?

A) 35 B) 45 C) 30 D) 40

**199)** 8 பேர் ஒரு வேலையை 24 நாட்களில் முடித்தால் அதே வேலையை 24 பேர் எத்தனை நாட்களில் முடிப்பர்?

A) 8 B) 16 C) 12 D) 24

**200)** ஒவ்வொரு பக்கத்திலும் 25 வரிகளைக் கொண்ட புத்தகத்தின் மொத்த பக்கங்கள் 144. அதே செய்தி ஒவ்வொரு பக்கத்திலும் 24 வரிகளாக இருந்தால் புத்தகத்தின் பக்கங்கள் எவ்வளவாக இருக்கும்

A) 162 B) 155 C) 150 D) 160

**All the Best!**

ETW ACADEMY